1977 ஜூலை 27]

(6) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி).

(ஆ) உறுப்பினர் அவைக்குள் வருவதற்குத் தடையாகக் கதவுகள் மூடப்பெற்றது குறித்து ;

(இ) மாணவர்கள் கிளர்ச்சி குறித்து ;

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்தக் கிளர்ச்சி பற்றி கேட்பதற்காக அல்ல நான் நிற்பது. நான் அவைக்குள் வரமுடியாமல் கதவு சாத்தப்பட்டிருந்தது. உறுப்பினர்கள் வரும் வழியை அடைப்பது முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் அவையின் உள்ளே நுழைய முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. இந்த நேரத்தில் கதவு திறந்து வைக்கப் பட்டால், மாணவர்கள் அவைக்குள் வர நேரிடும் என்பதற்காக மூடப்பட்டதே அன்றி, உறுப்பினர் சொல்வது போல் உறுப்பினரை அவைக்குள் வராது தடுப்பதற்கல்ல.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : I had to wait for five minutes. கதவைத் தட்டி, பிறகு உள்ளே நுழையவேண்டு மென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையை எப்படிச் செய்யமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து வெளியே இருக்கின்ற நிலைமையை எண்ணிப் பார்க்க வேண்டும். கதவைத் திறந்தால் வெளியார் உள்ளே வந்து விடுவார்கள் என்பதனால், முன் பாதுகாப்பாகச் செய்யப்பட்டது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்தமாதிரியாக மாணவர்களும் மற்றவர்களும் கிளர்ச்சி செய்து அமைச்சர்களைச் சந்திக்க வேண்டுமென்று கோட்டையை நோக்கி வருவது சாதாரணமாக நடைபெறுவதுதான். ஆனால் எனக்குத் தெரிந்தவரையில், இவ்வளவு தூரம் இந்தக் கோட்டைக்குள்ளேயே கிளர்ச்சிக்காரர்கள் அனுமதிக்கப்பட்டு அவையின் நடவடிக்கைகளில் உறுப்பினர்கள் கவனம் செலுத்த முடியாத அளவுக்கு நிகழ்ந்ததில்லை. அவர்களை கோட்டைக்கு வெளியிலேயே தடுத்து நிறுத்த போதிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லையா ? கிளர்ச்சிக் காரர்களை கோட்டைக்கு வெளியிலேயே தடுத்து நிறுத்தி, அவர்களின் பிரதிநிதிகளில் ஒரிருவரை அழைத்து அமைச்சர்கள் பேசுவது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. அப்படியில்லாமல் இன்றைய தினம் எல்லோரையும் அனுமதித்தது ஏன்? போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையா? இது சபையின் உரிமையை மீறும் விவகாரமாக உள்ளது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, சட்டமன்றத்திற்குள்ளே இதுமாதிரி நடந்ததில்லை. இந்தமாதிரி நடைபெற்றது உண்மையிலேயே வருந்தத்தக்கது. இன்றைய தினம் காலையில், நேற்று நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். அதை எடுத்துக்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருந்தால் நிச்சயமாக இந்தமாதிரியான நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்காது. அரசு தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்ற காரணத்தால் தான், இந்தமாதிரி நிகழ்ச்சி நடைபெறுகிறது. ஆகவே இந்தச் சூழ்நிலையில் நமது சட்டமன்றத்தை நடத்துவது பொருத்தமாக இராது. எனவே சட்டமன்றத்தை ஒத்திவைத்து, இதற்கு ஒரு பரிகாரம் தேடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவைத் தலைவரவர்களே, பெருமைக்குரிய உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இங்கே காலையில் முதலமைச்சர் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் தனது கருத்துக்களைத் தெரிவித்திருப்பாரேயானால் இத்தகைய துர்ப்பாக்கியமான சம்பவம் நடைபெற்று இருக்காது என்று குறிப்பிட்டு, மேலே ஒருபடி சென்று முதலமைச்சர் தனது பொறுப்பை தட்டிக்கழித்துவிட்ட காரணத்தினால்தான் இந்த அவலநிலை ஏற்பட்டது என்று அவருக்குரிய மொழியில் அவர் குறிப்பிட்டார். நான் மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் பேசும்போது அருமை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் இருந்தார். நமது கல்வி அமைச்சர் குறிப்பிட்ட நேரத்தில் மாணவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறார் என்றும் அதற்குப் பிறகு தகவல்களைத் திரட்டி எனக்குக் கிடைக்கின்ற தகவலின் அடிப்படையில் நான் பதில் சொல்வேன் என்றும் தெரிவித்திருக்கிறார். இவ்வளவு ஒழுங்கான முறையில், ஜனநாயக வகையில், நிலைமைகள் நடக்க வேண்டுமென்று விரும்பி ஒரு முதலமைச்சர் சொன்ன கருத்துக்குப் பதில் சொல்கிற எனதருமை நண்பர், ''பொறுப்பைத் தட்டிக்கழித்துப் பேசுகிறார்'' என்று பேசுவது எந்த அளவுக்கு நியாயமாக இருக்கும் என்பதை அவருக்கு இருக்கிற அனுபவத்தின் மூலம் எண்ணிப் பார்க்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மாணவர்கள் இதுவரையில் இந்தப் பக்கம் வந்ததே இல்லை என்று பழக்கமுள்ள அவர் சொன்னார். அவர்கள் வந்திருக்கிறார்கள்.

நமது முதல்வர் அவர்கள் இங்கே என்ன சொன்னார் என்று வெளியே இருக்கிற மாணவர்களுக்குத் தெரியாது. முதல்வர் என்ன சொன்னார் என்று வெளியே இருக்கிற மாணவர்களுக்கு

உள்ளே இருக்கிற யாராவது சொன்னாலொழிய அவர்களுக்கு அது தெரிந்திருக்க நியாயம் இல்லை. ஆகையினால் இங்கே இருப்பவர் அங்கேசென்று மாணவர்களைத் தூண்டிவிட்டு இங்கே வரவழைத் தார்கள் என்று குற்றம் சாட்டவில்லை. ஆனால், நிலைமைகளை ஒரு வகையில் உணர்ந்து பொறுப்புணர்வோடு நாம் நம்மை நடத்திக் கொள்வதன் மூலம் மாணவர்களுக்கு வழிகாட்டியாக அமைய வேண்டுமென்று திரு. ஜேம்ஸ் அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினை ஒரு கட்சியின் பிரச்சினை அல்ல. இது எதிர்கால சமுதாயத்தின் பிரச்சினை என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் இருப் போம். இதற்கு உள்நோக்கம் கற்பிக்காமல் இருப்போம். பரிகாரம் காண்பதற்கு முயற்சிப்போம். அதோடு இதை விட்டு விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்:</u> தலைவரவர்களே, நிதியமைச்சர் அவர்கள், வெளியே ரோம் தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கும் போது சபையில் கதாகாலட்சேபம் நடத்திக்கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். (கூச்சல்).

கதாகாலட்சேபம் என்பது தவறான வார்த்தை அல்ல........ (மீண்டும் கூச்சல்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். நான் நின்றுகொண்டிருக்கிறபோது மற்றவர் கள் இப்படி எழுந்து பேசுவதென்பது சரியல்ல.

<u>திரு. மு. கருணாநிதி:</u> திரு. ரகுமான்கான் கூறிய வார்த்தை தவறான வார்த்தையாக இருந்தாலும், அவையின் மரபுக்கு மாறு பாடான வார்த்தையாக இருந்தாலும், அவை முன்னவர் அதை மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறார். அவர் அதுபற்றி என்ன பதில் சொல்லப் போகிறார் என்பதை அறிந்து கொள்ளாமல் ஆளுங் கட்சியிலுள்ள அனைவரும் அவையில் குழப்பம் ஏற்படும் அளவுக்கு எழுந்து நின்று பேசுவது நல்லது அல்ல. நான் உட்கார் என்று சொன்னவுடன் என் சார்பில் உட்கார்ந்துவிட்டார்கள். ஆவை முன்னவர் பதில்கூறும் வரை ஆளுங்கட்சியிலுள்ளவர்களும் அமைதியாக இருப்பது நல்லது என்று சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> நான் சார்ந்திருக்கிற கட்சி உறுப்பினர்களுக்கும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்

எந்தக் காரணமாகவும் கோப உணர்ச்சி வெளிப்படாமல் உட்கார் என்று சொன்னால் உட்காருகிற அளவுக்கு உங்களைப் பயிற்றுவித்துக் கொள்ளவேண்டும். மற்றவர்கள் எந்த அளவிற்கு குரல் எழுப்பினாலும் நீங்களும் அந்த அளவிற்கு இறங்கிவிடக் கூடாது. அவையில் மதிக்கக்கூடிய மனப்பான்மை, அடக்க மனப்பான்மை, பொறுப்பு உணர்வு, கட்டுப்பாடு உணர்வு நமக்குத் தேவை என்பதோடு சபையில் இருக்கிற அனைவருக்கும் தேவை என்பதை வலியுறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே உறுப்பினர் திரு. ரகுமான்கான் ஏதோ பழமொழியைப் படித்திருப்பார்கள். அதைச் சொல்லிக் காட்டினார். ரோமாபுரி எரிந்தபோது நீரோ பிடில் வாசித்துக் கொண்டிருந்தான் என்று எல்லோருக்கும் தெரிந்த பழமொழி ஒன்றை இப்போதும் சொன்னார். இங்கே எதுவும் எரிந்துகொண்டிருக்கவுமில்லை, இது ரோமாபுரியும் இல்லை. மரபுகளையும் பண்புகளையும் கட்டிக் காக்கின்ற தமிழகத்தில் இருக்கிறார்கள். நீரோக்கள் இருக்கிறார்களோ என்னவோ தெரியாது. இது தமிழ்நாடு. நமது பண்பாட்டை காக்கத்தக்க வகையில் நடவடிக்கை அமையட்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

[சில உறுப்பினர்கள் உட்கார்ந்துகொண்டே பேசிக்கொண்டிருந்தனர்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நின்று கொண்டிருக்கிறேன். நீங்கள் உட்கார்ந்தபடியே பேசுவது அவை மரபுக்கு உகந்தது அல்ல.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினால் அந்த உறுப்பினர் பேசி முடிக்கிற வரையில் மற்றவர்கள் அமைதியாக இருப்பது முறை.

அவையில் ஒரு உறுப்பினர் பாராளுமன்ற முறைக்கு ஒவ்வாத சொற்களைச் சொன்னாலோ, கோபமூட்டக்கூடிய சொற்களைச் சொன்னாலோ ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேசுவது அவையின் மரபைக் கெடுப்பதாகும்.

உறுப்பினர் கூறிய வார்த்தைகள் சரியானதாக இல்லையென்றால் அதை எடுத்துக் காட்ட வேண்டியவர்கள் அவையில் உள்ள உறுப்பினர்கள் எல்லோரும் அல்ல. பேரவைத் தலைவர் அதை எடுத்துக் காட்டி முடிவு செய்வார்.

யார் எழுந்து பேசுவதானாலும் முதலில் அவைத் தலைவரின் அனுமதி பெற்றே எழுந்து பேச வேண்டும். எல்லோரும் ஏகோபித்து எழுந்து நின்று பேசுவதென்பது நீண்ட நாட்களாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கிற அவையின் மரபுகளைக் கெடுத்துவிடுவதாக அமையும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977 ஜூலை 27] [பேரவைத் தலைவர்]

ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்புகிறவர்கள் கூட, பண்பட்ட வார்த்தைகளை உபயோகித்து அவையின் அமைதியைக் காக்கின்ற வகையில் எழுப்ப வேண்டும்.

அவை முன்னவர் விளக்கம் தருவதற்கு முன், மாண்புமிகு உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப எழுந்தார். அவை முன்னவர் விளக்கம் தந்தபின் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப அந்த உறுப்பினரை அனுமதித்தபோது அவை முன்னவர் விளக்கத்தைப் பற்றியதாக தன் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். அதனால்தான் இந்த நிலை வந்தது.

யார் எந்தப் பிரச்சினையை எழுப்பினாலும் கொந்தளிப்புக்கு இடமளிக்காது அவையின் மரபுகளை ஒட்டி எழுப்புவது நல்லது. அவைத் தலைவரின் அனுமதியோடு பேசுவது நல்லது என்று உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் மரபுகளை, கண்ணியத்தைக் காத்து பேரவை நடவடிக்கைகள் அமைதியாக நடைபெற எல்லோரும் ஒத்துழைப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 11-50)

அவர்கள் சொன்ன வார்த்தை நன்றாக இருக்காது என்று நினைக்கிறேன். அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட நான் உத்தரவிடுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : அவை முன்னவர் அவர்கள் திரு. ரகுமான்கான் அவர்கள் கூறிய அந்த வார்த்தைக்கு பதிலைக் கூறிவிட்டார்கள். அது பாராளுமன்ற நடைமுறைக்கு ஒவ்வாத வார்த்தை என்று யாரும் கூற இயலாது. பதிலைக் கூறிய பிறகு நடவடிக்கைப் புத்தகத்திலிருந்து எடுப்பது என்றால் அது சரியல்ல. அப்படியானால் இங்கே ஆளும் கட்சி சார்பில் பேசிய ஒரு உறுப்பினர் கருணாநிதி சமர்ப்பித்த பட்ஜட் சாக்கடை, இது பூக்கடை என்றெல்லாம் பேசினார்கள். அப்போது அதை எல்லோரும் கேட்டுக்கொண்டுதான் இருந்தோம். அப்போது எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் அமைதியாகத்தான் உட்கார்ந்து கொண்டிருந்தோம். எனவே இப்படிப்பட்ட வார்த்தைகளை நீக்கிக்கொண்டே போனால் எதுவுமே நடவடிக்கைக் குறிப்பில் ஏறாது என்றதொரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவு சூடான வார்த்தை குறிப்பில் இருக்க வேண்டாம் என்று சொன்னேனே தவிர அது பாராளுமன்ற முறைகளுக்கு மாறாக இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. வெளியிலே பற்றியெரிகிறபோது இங்கே கதாகாலட்சேபம்..............

திரு. ஏ. ரகுமான்கான் : சபையிலே ஏற்கனவே அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிகளைப் பார்த்து நடந்துகொள்ளுங்கள். அவைத் தலைவர் நிற்கிறபோது என்ன தான் உணர்ச்சி வந்தாலும் உட்கார்ந்து பேசுவது நல்லதல்ல. எதிர்க்கட்சித் தலைவர் அது இருக்கலாம் என்று விரும்பினால் எனக்கு ஆட்சேபணையில்லை. நான் நினைத்தது வேறு.

திரு. மு. கருணாநிதி : 'சாக்கடை' போன்ற வார்த்தைகள் எல்லாம் இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்ட பிறகு இந்த வார்த்தை இருப்பதில் தவறு இல்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : என்னைப் பொறுத்த வரையில் இதை விடக் கடுமையான, தரக்குறைவான வார்த்தைகள் எந்தத் தரப்பிலிருந்து வந்தாலும் குறிப்பில் இடம் பெறுவதுபற்றி ஆட்சேபணையில்லை. எதிர்காலம் அவர்களைப் புரிந்து கொள்வதற்கு அந்தக் குறிப்புகள் உதவும் என்று நான் நம்புகிறேன். (ஆரவாரம்).

திரு. மு. கருணாநிதி : அதனால்தான் ஆளும்கட்சி உறுப்பினர் பயன்படுத்திய சாக்கடை என்ற வார்த்தையும் அவைக் குறிப்பில் இருக்க வேண்டும் என்று நானும் விரும்புகிறேன். (ஆரவாரம்).

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரிலும் இது போன்ற குழப்பமான, பதட்ட நிலை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. சென்ற முறை நான் சட்டமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு என் தொகுதிக்குச் சென்ற போது என்னுடைய பகுதியில் உள்ள மக்கள் எல்லாம் கேட்டார்கள். சட்டசபையில் பாதுகாப்பு இருக்காதுபோலிருக்கே ; ஆகவே அரசு ஊழியர்களுக்கு, அலுவலர்களுக்கு பணிபுரிகிறபோது ஏதாவது ஏற்படுமானால் அதற்கு அரசாங்கம் ரூ. 10,000 கொடுக்கிறார்கள். அதேபோல்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒழுங்குப் பிரச்னை என்ன என்று சொல்லுங்கள். இதை, விவாதத்தின்போது தாங்கள் அழகாகப் பேசலாமே.

1977 ஜூலை 27]

திரு. துரை முத்துசாமி : அதேபோல் சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்கு இதுபோன்ற குழப்பமான நிலைமையில், பதட்டமான நிலைமையில் ஏதாவது ஏற்படுமானுல் அதற்கு அரசு உத்தரவாதம் அளிக்குமா ?

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கருத்தை, தன் அச்சத்தை பொது விவா தத்தில் பேசும்போது அவர்கள் சொல்லலாம். இதில் ஒழுங்குப் பிரச்சனை எழவில்லை. இந்த அவை மாநிலத்தின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை எடுக்கிற அவையாகும். என்னென்ன பாதுகாப்பு கள் தேவை என்று பொது விவாதத்தில் பேசும்போது தாங்கள் கூறலாம் பாதுகாப்பு கொடுக்கப்படவில்லை, பாதுகாப்பு கொடுக்க தவறி விட்டது என்று தக்க ஆதாரங்கள் காட்டிப்பேசினுல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தயாராகயிருக்கலாம். நாம் நம்முடைய மரபைக் காப்பாற்றினுல், நாம் ஒற்றுமையாக இருந் தால், வெளியிலே மக்களிடையே அமைதி தானுகவே ஏற்படும். நாம் நமது மரபுகளை, இங்கு அமைதியைக் காப்பாற்றிக் கொள்ள முயலுவோம். பிறகு வெளியிலே மக்களிடையே அமைதியைக் காப்பாற்ற அந்தந்த இலாக்காக்கள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தை குறிப்பில் இருந்து நீக்கி விட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு முக்கிய காரணம் ஒன்று இருக்கிறது. பொதுவாகச் சொல்லிக் கொண்டு வந்தால் பரவாயில்லை.

* * *

அவற்றை தயவுசெய்து குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிட வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் சொன்னதையும் சேர்த்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. டி. இராமசாமி : கதாகலாட்சேபம், சாக்கடை என்ற வார்த்தைகள் எல்லாம் இருக்கும்போது இந்த வார்த்தைகள் இருப்பது தவறு ஒன்றுமில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமி அவர்கள் சொன்ன கருத்துக்கள் அத்தனையும் நடவடிக்கை குறிப்பிலிருந்து . . . . .

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது. (முற்பகல் 11-50—11-55-க்குள் சில பகுதிகள்.)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இறுதியாக சொன்ன கருத்துக்களும், அவற்றுக்கு நான் பதிலாக சொன்ன கருத்துக்களையும் சேர்த்து இவை மட்டும் நீக்கினால் போதுமானது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தவிர மற்றவைகள் இருக்கட்டும் என்று சொல்லுகிறீர்களா ? . . . . எதிர்க்கட்சித் தலைவரும் நீங்களும் ஒரு தடவை வேண்டும் என்கிறீர்கள் ஒரு தடவை வேண்டாம் என்கிறீர்கள் ? நான் என்ன முடிவுக்கு வருவது என்றே தெரியவில்லை.....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சபாநாயகர் அவர்களே நான் சொல்லிக்கொண்டு வந்தது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுக்கு பாதுகாப்பு உண்டா என்று கேட்டுவிட்டு வேடிக்கையாகவும் சிலவற்றை சொன்னார்கள். அதைப்பற்றி கவலைப்படவில்லை நான் கவலைப்பட்டுக்கொள்வதெல்லாம்?

* * *

You are the custodian of the rights and privileges of the Members of this Assembly, not only Members of this Assembly but also Gallery visitors.

ஆகவே தயவுசெய்து அந்தக் கருத்து பத்திரிகையில் வருமானால் கொஞ்சம் நாம் எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சபையின் நடைமுறைக்கு இது சரியுமல்ல, சபையினுடைய மதிப்பும் குறையும், என்கின்ற கருத்துக்கு இடம் தராமல் இருப்பது நல்லது. ஆகவே இது இடம் பெறக்கூடாது என்று நீங்களும், பெருவாரியான நல்ல உள்ளம் படைத்த பொறுப்புள்ள அத்தனை உறுப்பினர்களும் கருதுகின்ற காரணத்தால் தான் இதை நீக்கவேண்டுமென்று குறிப்பிடுகிறேனேத் தவிர தேவையில்லாமல் வேண்டுமென்றோ வேண்டாமென்றோ சொல்ல மாட்டேன். இதில் நானும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் ஒருமித்த கருத்து உடையவர்களாய் இருப்பதை நினைத்து நான் பெருமைப்படுகிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் வேண்டுமென்றோ அல்லது வேண்டாமென்றோ, எந்தக் கருத்துக்களை நீங்கள் சொன்னாலும், அதை நான் கவனித்துப் பார்த்துத்தான் என்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது. (முற்பகல் 11-55 நண்பகல் 12-00-க்குள் சில பகுதிகள்).

னுடைய தீர்ப்பைத் தருகிறேன். என்னுடைய விளக்கத்திற்குப் பிறகு அதை செயல்படுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் முயற்சிக்க வேண்டும். திரு. துரை முத்துசாமி அவர்கள்,

* * *

என்று சொன்ன பகுதியும், அதற்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அளித்த பதில் உரையும் சபை நடவடிக்கைக் குறிப்பு ஏட்டிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் உள்ளே நுழைந்ததுபற்றி பேசிக்கொண்டிருந்தோம். இதுவரை இப்படி சபையில் நடைபெறுமல் இருந்தது. இப்போது நடந்திருக்கிறது. இந்த அவைக்கும் இந்த அவையைச் சார்ந்த இடங்களுக்கும் தாங்கள் தான் பாதுகாப்பாளர். அந்த முறையில் இங்கே ஏன் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்கின்ற ஓர் ஒழுங்குப் பிரச்சினையை நான் கிளப்பியிருந்தேன். அதற்கு தாங்கள் பதிலளிக்கவில்லை. அதற்கு பதில் அளித்தால் உதவிகரமாய் இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, மாணவர்கள் உள்ளே நுழைந்துவிடவில்லை. பாதுகாவலர்கள் எதிர்பாராத விதத்தில், இருவர் வந்துவிட்டார்கள். அவர்களை உள்ளே விடவில்லை, உடனடியாக அவர்களை வெளியே அனுப்பிவிட்டார்கள். வெளியார் யாரும் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இன்று நடந்தவைகளையும் பார்த்து ஆலோசித்து மன்றத்தில் இனிமேல் இவ்விதம் நடைபெறுத வண்ணம் பார்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது பேசலாம், நிதிநிலை அறிக்கையைத் தவிர வேறு எதையும் பற்றி பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

திரு. துரை முத்துசாமி: பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், தலைவர் அவர்களே. என்னென்ன விவரங்கள் நீக்கப்பட்டன என்பதை இங்கு அறிவிக்க முடியுமா?

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (முற்பகல் 11-55 நண்பகல் 12-00இல் சில பகுதிகள்) அகற்றப் பெற்றது.